[18th March 1959

(ஆ) இந்த செண்டர்களில் நூல் நூற்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ?

(இ) நூல் நூற்றுப் பழகிய பெண்களுக்கு அரை விலையில் அல்லது கடன் திட்டத்தில் சர்க்காக்கள் சப்ளை செய்யப்படுகிறதா ?

(ஈ) இல்லையென்றால், இனிமேலாவது சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There are three Women's Welfare Branches in the Tirunelveli district at Eral, Surandai and Chokkankudi Iruppu. In each branch, there is one slum centre and one centre for poor and middle class women. There are thus six centres in the district.

(*b*) Yes, Sir.

(*c*) This is being done in Chokkankudi Iruppu, which is in a Block area, where this concession exists.

(*d*) General instructions have been issued to all the Assistant Women's Welfare Officers to encourage spinning and to avail the concession in the matter of exchanging of hanks and for the supply of charkas by contacting the Block Development Officers and other District Officers.

MR. SPEAKER : அடுத்தபடியாக 771-ம் கேள்வி விட்டுப்போய் விட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கலாம்.

Cost of production of crops

* 771 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon the Minister for Home be pleased to state—

(*a*) whether the Economics and Statistical Department, Madras, undertook sample survey of the cost of production of various crops in the State in 1951–52; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No sample survey of the cost of production of various crops in this State was undertaken in 1951–52.

(*b*) Does not arise.

SRI R. SRINIVASA IYER : If a sample survey had not been taken, have the Government got particulars of the cost of cultivation in the Research Stations and Agricultural Farms which they are running?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவுக்கு இந்த மாதிரி பரிசீலனை செய்ய வேண்டுமென்று 1955-ல் கவனம் செலுத்தப் பட்டது. ஆனால் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ஒரு பண்ணைக்கும் இன்னொரு பண்ணைக்கும், ஒரு நிலத்திற்கும் இன்னொரு நிலத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. சரியான வகையில் சர்வே செய்ய முடியவில்லை என்று கைவிடப்பட்டது. ரிசர்ச் ஸ்டேஷனில் செய்வது வேறு விஷயம். ரிசர்ச் ஸ்டேஷனில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆராய்ச்சியின் விலைவாசியைச் சேர்த்து அதை ஒப்பிட முடியாது. எப்படியும் விஞ்ஞான ரீதியில் விவசாயச் செலவுபற்றி ஒரு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தோடு கூட இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன்.

18th March 1959]

SRI S. LAZAR : ஸார், உணவுப் பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க முற்படுவதன் காரணத்தினால், உற்பத்தி விலையை ஜில்லா வாரியாக எடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் நான் இப்போது பதில் சொன்னது. விஞ்ஞான முறையில் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம் இது. மத்திய அரசாங்கத்தோடு இதைப்பற்றி யோசித்து என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : நம் விதைப் பண்ணைகளிலும் சரி, அல்லது ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் சரி, ஒரு ஏக்கருக்கு நல்ல முறையில் நெல் சாகுபடி செய்ய என்ன ஆகிறது என்று உத்தேசமான கணக்காவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு இடத்தையும் ஒவ்வொரு பண்ணையையும், ஒவ்வொரு நிலத்தையும் பொறுத்திருக்கிறது. ஒவ்வொன்றில் லாபமும் வந்திருக்கிறது. விதைப் பண்ணையெல்லாம் ஆராய்ச்சி செய்யக்கூடிய இடம், அரசாங்கம் நடத்துவதால் சிப்பந்திகள் இருப்பதால் அந்தச் செலவெல்லாம் இருக்கிறது. இப்போது கூட கணக்கு இருக்கிறது. புதிதாகப் பரிசீலனை செய்யும் போது இதை ஆதாரமாக வைத்துக்கொள்ளலாம்.

SRI R. SRINIVASA IYER : Sir, apart from Research Stations and Seed Farms, with the particulars of wages, prices and other necessaries of cultivation expenses available with the Government, will Government consider the necessity of calculating the cost of cultivation per acre of important crops like paddy, sugarcane, etc?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, as I have already pointed out, the cost varies not only from district to district, from taluk to taluk, but from village to village. Therefore I cannot give an assurance to the hon. Member, that I can undertake a survey like that.

SRI N. K. PALANISAMI : விலைவாசி கணக்கிடும்போது சர்க்கார் போடக்கூடிய வரி, இன்னும் அவர்களுடைய கடன், போக்குவரத்து இவைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளைக் குறைத்தால்தான் அவர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் அடிப்படையில் அதைக் கழித்து விலை நிர்ணயம் செய்வது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவைகளை யெல்லாம் வைத்துக் கொண்டுதான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய அளவுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

Cottage Industries

*858 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் குடிசைத் தொழில் மூலம் என்னென்ன பொருள் உற்பத்தியாகிறது ?

(ஆ) அவை ஒவ்வொன்றில் கடந்த ஆண்டு உற்பத்தியான ஜில்லா வாரி அளவும் பெருமானமும் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

---

a. Printed as Appendix I on pages 640-643 infra.